**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்: 535** **நாள்: 03.10.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சி 1 முதல் 15 வரையிலான அனைத்து மண்டலங்களிலும் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக பயன்படுத்தப்படவுள்ள வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் அனைத்து வகை உபகரணங்கள் தயார்படுத்தும் பணியின் முன்னேற்பாடுப் பணிகள் இன்று மேற்கொள்ளப்பட்டது.**

**இப்பணியினை வட்டாரத் துணை ஆணையாளர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.**

பெருநகர சென்னை மாநகராட்சி 1 முதல் 15 வரையிலான அனைத்து மண்டலங்களிலும் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக பயன்படுத்தப்படவுள்ள வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் அனைத்து வகை உபகரணங்கள் தயார்படுத்தும் பணியின் முன்னேற்பாடுப் பணிகள் இன்று (03.10.2026) மேற்கொள்ளப்பட்டதை வடக்கு, மத்தியம் மற்றும் தெற்கு வட்டார துணை ஆணையாளர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, மாதவரம் மண்டல அலுவலக வளாகம் மற்றும் மணலி மண்டல அலுவலக வளாகத்தில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக பயன்படுத்தப்படவுள்ள ஜெனரேட்டர் மற்றும் மொட்டார்கள் தயார்படுத்தும் பணியின் முன்னேற்பாடுப் பணி, இதனைத் தொடர்ந்து, மாதவரம் மண்டலத்தில் எம்.ஆர்.எச். சாலையில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி, மண்டல அலுவலகக் கட்டடத்தின் கட்டுமானப் பணி, இலவச ஒப்பனை அறை உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு. எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டல அலுவலக வளாகம் மற்றும் அண்ணாநகர் மண்டலம், அம்மா அரங்கத்தில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக பயன்படுத்தப்படவுள்ள வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் அனைத்து வகை உபகரணங்கள் தயார்படுத்தும் பணியின் முன்னேற்பாடுப் பணி, இதனைத் தொடர்ந்து, தேனாம்பேட்டை மண்டலத்தில் மகாலிங்கபுரம் பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி, ஹபிபுல்லா சாலையில் மழைநீர் வடிகாலில் இருந்து வண்டல்கள் அகற்றும் பணி, நுங்கம்பாக்கம் கால்வாயில் இயந்திரம் மூலம் தூர்வாரும் பணி, கிரியப்பா சாலையில் உள்ள நிவாரண மையம் மற்றும் சமையல் கூடம் உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு. அஃதாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, சோழிங்கநல்லூர் மண்டல அலுவலக வளாகத்தில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக பயன்படுத்தப்படவுள்ள ஜெனரேட்டர் மற்றும் அனைத்து வகை உபகரணங்கள் தயார்படுத்தும் பணியின் முன்னேற்பாடுப் பணி, ஆலந்தூர் மண்டலம், வார்டு-160க்குட்பட்ட முதல்வர் திருமண மண்டபம், கே.கே.நகர் 4ஆவது தெருவில் உள்ள பயன்பாடற்ற கிணற்றை அகற்றுவது தொடர்பாகப் பெறப்பட்ட மனுவைத் தொடர்ந்தும், உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின் போது, மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**